யபிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

08 12 2024 6 45

ஞாயிற்றுக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. வளர்ச்சியடைந்த நாடாக இந்தியாவை உருவாக்குவதற்கான இலக்குடன் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. நாடுகளிடையேயா மோதல்கள் பொருளாதார பாதிப்பை எற்படுத்துவதாக உள்ளது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

3. விளையாட்டுத்துறையின் மேம்பாட்டிற்காக மாநில அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஊட்டச்சத்து உதவித்தொகை ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

5. குவஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் போட்டியில் இந்தியாவின் சதீஷ்குமார் கருணாகரன் இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

வளர்ச்சியடைந்த நாடாக இந்தியாவை உருவாக்குவதற்கான இலக்குடன் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அகமதாபாதில் நடைபெற்ற சுவாமி நாராயண் அமைப்பின் பொன்விழா நிழ்ச்சியில் காணொலி மூலம் கலந்துகொண்டு பேசிய அவர், ரஷ்யா – யுக்ரைன் இடையேயான போரின்போது யுக்ரைனில் இருந்து இந்தியர்களை பாதுகாப்பாக வெளியேற்றுவதற்காக இந்த அமைப்பு மேற்கொண்ட முயற்சிகளுக்கு பாராட்டு தெரிவித்தார்.

நாட்டின் கலாச்சார ஆன்மிக பாரம்பரியத்தை உலக அளவில் பரப்புவதில் இந்த அமைப்பின் பங்களிப்பு அளப்பரியது என்று அவர் தெரிவித்தார்.

இளம் தலைமுறையினருக்கு புதிய வாய்ப்புகளை வழங்கும் வகையில் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இளம் தலைவர்கள் என்ற கருத்தரங்கு வரும் ஜனவரி மாதம் ஏற்பாடு செய்யப்படும் என்று பிரதமர் குறிப்பிட்டார்.

நாட்டின் கலாச்சார பன்முகத்தன்மை மற்றும் ஆன்மிக பாரம்பரியம் உலக நாடுகளை ஈர்த்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார்.

<<<<>>>>

நாடுகளிடையே ஏற்படும் மோதல்களுக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணப்பட வேண்டியது அவசியம் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

தோஹாவில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர், ரஷ்யா – யுக்ரைன் இடையேயான போர் காரணமாக உலக அளவில் பொருளாதார பாதிப்புகள் ஏற்படுவதாக கூறினார்.

போரை முடிவுக்குக் கொண்டு வருவதில் இந்தியா, தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

வளைகுடா நாடுகளில் நிலவும் பதற்றமாக சூழல் இந்தியாவின் பொருளாதார மற்றும் பாதுகாப்பில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக திரு. ஜெய்சங்கர் கூறினார்.

<<<<>>>>

நாட்டில் உள்ள சிறுபான்மையினர் மற்றும் விளிம்புநிலை மக்களின் மேம்பாட்டிற்காக நிதியுதவி வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. கிரன் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் மத்திய சிறுபான்மையின நல அமைச்சகத்திற்கும் – தலித் இந்திய வர்த்தக மற்றும் தொழிற்சபைக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தம் நலிவுற்ற பிரிவு மக்களின் மேம்பாட்டிற்கு உதவிடும் என்று கூறினார்.

தொழில்முனைவோரை ஊக்குவிப்பதன் மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும் என்றும், இது சுயசார்பு இந்தியாவின் இலக்குகளை எட்டுவதற்கு உதவிடும் என்றும் கூறினார்.

<<<<>>>>

ஐரோப்பிய வர்த்தக கூட்டமைப்பு நாடுகளிடம் இருந்து நூறு பில்லியன் டாலர் அளவிலான முதலீடுகளை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்திய – ஐரோப்பிய நாடுகளிடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் இதுகுறித்து விவாதிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மும்பையில் நடைபெறும் இக்கூட்டத்தில் இந்தியா சார்பில் மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தலைமையிலான பிரதிநிதிகள் குழுவும், நாட்வே தூதர் திரு. **May-Elin Stner** தலைமையிலான பிரதிநிதிகள் குழுவும் இருநாடுகளுக்கும் இடையேயான வர்த்தக ஒத்துழைப்புகள் குறித்து விவாதிக்க உள்ளன.

<<<<>>>>

நடப்பாண்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேசிய விருதுக்காக பல்வேறு பிரிவுகளில் மொத்தம் 45 உள்ளாட்சி அமைப்புகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

சிறந்த நிர்வாகம், சமூக மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு அம்சங்களைக் கருத்தில் கொண்டு உள்ளாட்சி அமைப்புகள் விருதுக்காக தெரிவு செய்யப்படுகின்றன.

தேசிய விருதுகாக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் 42 சதவீதம் பெண்கள் தலைமையிலான உள்ளாட்சி அமைப்புகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விருதுக்காக நாடு முழுவதிலும் இருந்து ஒரு லட்சத்து 94 ஆயிரம் கிராம பஞ்சாயத்துகள் பங்கேற்றுள்ளன.

புதுதில்லியில் இம்மாதம் 11ஆம் தேதி நடைபெற உள்ள 2022-23ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேசிய விருதுகள் வழங்கும் விழாவில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு விருதுகளை வழங்குகிறார்.

<<<<>>>>

காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாதம் 500 ரூபாய் என்ற அளவில் வழங்கப்பட்டு வந்த ஊட்டச்சத்து உதவித்தொகை இந்த மாதம் முதல் ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

வேலூரில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அமைச்சர், காசநோய் இல்லா இந்தியாவை உருவாக்குவதற்கான நூறு நாள் பிரச்சாரம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

மாநில அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்கள் காரணமாக மருத்துவத்துறையில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

மருத்துவ உபகரணங்கள் பயனாளிகளுக்கு முறையாக வழங்கப்படுகிறதா என்பதை அரசு கண்காணித்து வருவதாகவும் திரு. மா. சுப்பிரமணிய் கூறினார்.

<<<<>>>>

விளையாட்டுத்துறையின் மேம்பாட்டிற்காக மாநில அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

வேலூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அவர், வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, நீலகிரி மாவட்டங்களுக்கு வியைாட்டு உபகரணங்களின் தொகுப்புகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், கிராமப்புறங்களில் சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கும் வகையில் 33 விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய இந்தத் தொகுப்பு, ஒவ்வொரு ஊராட்சிக்கும் வழங்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

செஸ் ஒலிம்பியாட், ஆசிய ஹாக்கிப் போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் தமிழகத்தில் சிறப்பாக நடத்தப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

<<<<>>>>

சேலத்தில் நடைபெற்று வரும் புத்தககாட்சி அனைத்து தரப்பு மக்களின் வரவேற்பைப் பெற்றுள்ளது.

இந்தப் புத்தக காட்சியில் தமிழ்நாடு சிறைகள் மற்றும் சீர்திருத்த துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்கில், புத்தக காட்சிக்கு வரும் மக்கள் சிறைவாசிகளின் வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்த உதவிடும் வகையில் புத்தகங்களை பரிசாக வழங்கி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

இங்கிலாந்தில் வீசும் சூறாவளிக் காற்று காரணமாக அந்நாட்டு வானிலை மையம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளதை அடுத்து, வேல்ஸ் மற்றும் தென்மேற்கு இங்கிலாந்து பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்புடன் இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

கானாவில் அந்நாட்டு அதிபரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நேற்று நடைபெற்றது.

<<<<>>>>

பிரான்சில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட **Notre-Dam** தேவாலயம் மறுசீரமைக்கப்பட்டு 5 ஆண்டுகளுக்குப் பின் நேற்று மீண்டும் திறக்கப்பட்டது.

<<<<>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பயனற்ற 4 சக்கர வாகனங்கள் மற்றும் உதிரி பாகங்கள் அம்மாவட்ட காவல் அலுவலக மைதானத்தில் இம்மாதம் 17ஆம் தேதி ஏலம் விடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

திருவண்ணாமலை அண்ணாமலையார் மலைமீது ஆய்வு மேற்கொள்வது குறித்து துறைசார்ந்த நிபுணர் குழுவுடன் ஆட்சியர் திரு. பாஸ்கர பாண்டியன் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

<<<<>>>>

தென்காசி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற காசிவிஸ்வநாதர் ஆலய கலையரங்கில் உலக நாட்டிய தினவிழா கொண்டாடப்பட்டது.

<<<<>>>>

கரூரில் தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின்கீழ் நடமாடும் எக்ஸ்-ரே வாகனத்தை ஆட்சியர் திரு. தங்கவேல் தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்டத்தில் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை விரைவில் முடிப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

<<<<>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

குவஹாத்தில் மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் போட்டியில் இந்தியாவின் சதீஷ்குமார் கருணாகரன் இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் அவர், 13-21, 21-14, 21-16 என்ற செட் கணக்கில் சீனாவின் **Wang Zhug Xing**-ஐ வென்றார்.

இன்று நடைபெறும் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் அன்மோல் கார்ப் - சீனாவின் **Cai Yan Yan**-ஐ எதிர்கொள்கிறார்.

மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் தனிஷா கிராஷ்டோ – அஷ்வினி பொன்னப்பா இணை - சீன இணையை இன்று எதிர்கொள்கிறது.

<<<<>>>>

மஸ்கட்டில் நடைபெற்று வரும் ஆசியக் கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கிப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா – பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

சீன தைபேயில் நடைபெற்று வரும் சர்வதேச வில்வித்தைப் போட்டியில் 4 தங்கம், ஒரு வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களுடன் இந்தியா பதக்கப்பட்டியலில் இரண்டாம் இடத்தில் உள்ளது.

**<<<<the End>>>>**